Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
College House

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 250 | உள்ளூர் - 07.09.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 250 | வெளியூர் - 08.09.2026 | செவ்வாய்க்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

தொழில் / நிதி பிரச்சனை நீங்க வாஸ்துகள்!

தெற்கு ரயில்வேயில் 4,308 வேலைவாய்ப்புகள்!

மத்திய அரசு ஊழியர்களுக்கு ஜாக்பாட்!

வாகன ஓட்டிகளே உஷார்!

## முதல்வர் விஜய்யின் ஆவேச அட்டாக்!

# திமுகவை நோக்கி கேள்விக்கணைகள்! “இதுதான் திமுக!” – அதிரடி பதிலுரை!

## அவையில் பரபரப்பு... திமுக வெளியேறியது!!

சென்னை, செப். 07–

தமிழக சட்டப்பேரவை இன்று (07.09.2026)காலை கூடியதும் 2026–ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சம்பளங்கள் சட்டத் திருத்த மசோதாவை முதல்வர் தாக்கல் செய்தார்.

பின்னர், காவல்துறை, மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட துறைகளின் மானியக் கோரிக்கை விவாதங்களின் மீது முதல்வர் விஜய் பதிலுரை ஆற்றினார். 15 முதல் 20 நிமிடங்கள் வரை காவல்துறை மற்றும் தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கு குறித்துப் பேசிய முதல்வர் விஜய், திடீரென திமுக பற்றி பேசத் தொடங்கினார். அப்போது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைத்தார். சரியாக ஒரு மணி நேரம் பேரவையில் முதல்வர் விஜய் உரை யாற்றினார்.

பேரவையில் பேசிய முதல்வர் விஜய், ஆதாரங்கள் ஆதாரங்கள் என்று கேட்கிறீர்களே, இதற்கெல்லாம் நாடாளுமன்றம் செல்ல வேண்டாம், நமது நூலகத்திலேயே சர்காரியா ஆணையத்தின் புத்தகம் உள்ளது. அதில் அனைத்து விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

மிஸ்டர் க்ளீன், மிஸ்டர் க்ளீன் என்று சொல்லிக் கொள்பவர்களே, திமுக ஆட்சியின் முறைகேடுகளை நீங்களே தெரிந்து கொள்ளலாம். அப்போதே அப்படி என்றால் இப்போது எப்படி என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

மேலும், அமலாக்கத்துறை விசாரணை அறிக்கையில், பல்வேறு முறைகேடுகள் குறித்து பட்டியலிட்ட விஜய், திமுகவினர் எதைச் செய்தாலும் குடும்பமாகத்தான் செய்வார்கள் என்றும் குறிப்பிட்டார்.

திமுக ஆட்சிக்காலத்தில் 7.5 சதவிகிதம் முதல் 10 சதவிகிதம் வரை கட்சி நிதி என்ற பெயரில் லஞ்சம் வாங்கியதாக அமலாக்கத் துறை கூறியுள்ளது. கட்சி நிதி வாங்கியதில் முக்கிய நபர்கள் ஸ்டாலின், உதயநிதி தான் என அமலாக்கத் துறை கூறியுள்ளது. அமைச்சர் செந்தில் பாலாஜி தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தினார் என அமலாக்கத் துறை கூறியது.

சர்காரியா கமிஷன் எழுதிய புத்தகம் சட்டப்பேரவை நூலகத்தில் உள்ளது, அதை எடுத்து படித்தால் திமுகவின் ஊழல்கள் தெரியும். தனது அதிகாரத்தை செந்தில் பாலாஜி தவறாக பயன்படுத்தியுள்ளார்; விஞ்ஞான ஊழல் என்பதும் இதில்தான் வரும். கலைஞர் மேல் எனக்கு மதிப்பும் மரியாதையும் உள்ளது, நான் அமலாக்கத்துறை அறிக்கையைத்தான் பேசுகிறேன்.

முதலமைச்சர் பதவியை கலைஞர் கருணாநிதி தவறாக பயன்படுத்தியதாக அமலாக்கத்துறை அறிக்கை அளித்துள்ளதாக ஆதாரத்தை காட்டி உணர்ச்சி பொங்க பேசினார் முதலமைச்சர் விஜய்.

கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இயங்கி வந்த பார்களில், கட்சி நிதி வசூலிக்கப்பட்டுள்ளது. அமலாக்கத் துறை அறிக்கையில் கரூர் கேங் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சூப்பர் பெயர் அல்லவா கரூர் கேங். இதற்கு தலைவர் யார் என்று தெரிந்து கொள்ள நமக்கே இவ்வளவு ஆர்வமாக இருக்கிறதே, மக்களுக்கு இருக்காதா என்றும் விஜய் கூறினார்.

**இதுதான் திமுக, இவ்வளவுதான் திமுக!**

தமிழக மக்களுக்காகத்தான் வந்திருக்கிறேன், உண்மையில் அவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்த மட்டும்தான் வந்திருக்கிறேன்.

கவிஞர் கண்ணதாசன் திமுகவைப் பற்றி மிக அழகாகச் சொல்லியிருப்பது என்ன தெரியுமா? பேசிப் பழகிய பொய், வாங்கிப் பழகிய கை, போட்டுப் பழகிய பை, இதுதான் திமுக. இவ்வளவுதான் திமுக. ஒன்றுதான் இங்கு சொல்ல வேண்டும், நம்முடைய அரசு, தனிப்பட்ட அடையாளமாக இருக்காது. நம்முடைய அரசின் அடையாளம் தமிழ், தமிழர், தமிழ்நாடு. தமிழ்நாட்டின் 8 கோடி பேரும் என் சொந்தங்கள். அவர்களுக்கான அடையாளமாகவே தமிழக அரசு செயல்படும்.

கடந்த வாரம் பேசும்போது, எனது மேஜையில் மூன்று கோப்புகள் உள்ளன,



அதை எப்போது திறக்க வேண்டுமோ அப்போது திறப்பேன் என்று கூறினேன். அதற்கு ஒரு சாம்பிள் சொல்லட்டுமா? போன திமுக அரசுக்கு அமலாக்கத் துறை அனுப்பிய ஆவணங்களில், சர்காரியா ஆணையத்தில் வீராணம் ஏரி ஒப்பந்தம் வழங்கியதில் நடந்த முறை கேடு குறித்து தெரி விக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் வழங்க 2.5 சதவீத கமிஷன் தர வேண்டும் என்று மாறன் கேட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண் காவல் ஆய்வாளரை தாக்கிய திமுக பிரமுகர் – மனைவி கைது செய்யப்படவில்லை. பல்லாவரம் திமுக முன்னாள் எம்எல்ஏ கருணாநிதி வீட்டில் பணிப்பெண்ணுக்கு கொடுமை நடந்துள்ளது. திமுகவினர் மீதான புகார்களில் உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் கால தாமதம் நடந்துள்ளது. திமுக ஆட்சியில் முதல் தகவல் அறிக்கை பதிவில் தாமதம் ஏற்பட்டிருப்பதற்கு உயர் நீதிமன்றமே கண்டித்திருக்கிறது என்றும் முதல்வர் விஜய் கூறினார்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில், கால தாமதம் செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விளாத்திகுளம் சிறுமி பாலியல் கொலை வழக்கிலும் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்ய கால தாமதம் நடந்துள்ளது என்று முதல்வர் விஜய் பட்டியலிட்டார்.

**சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்ததாகக் கூற முடியாது:**

,“குற்றத்தைப் பார்க்கும் பார்வையில் மாற்றம் வேண்டும். ஒரு குற்றம் நடைபெற்று விட்டது என்பதற்காக, ஒட்டுமொத்த மாநிலத்தின் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று கூறிவிட முடியாது.

தனிப்பட்ட குற்றச் சம்பவத்துக்கும் மாநிலத்தின் ஒட்டுமொத்த சட்டம் – ஒழுங்கு நிலைக்கும் வேறுபாடு இருக்கிறது. ஒரு குற்றம் நடைபெற்று விட்டபிறகு, அதற்கான பொறுப்பை அரசு மீது சுமத்தி, மற்றவர்கள் ஒதுங்கிவிட முடியாது.

ஏனெனில், அனைத்து குற்றங்களும் கடந்த 100 நாள்களில் தோன்றியதல்ல. ஒவ்வொரு குற்றத்துக்குப் பின்னாலும் ஒரு குடும்பப் பிரச்னை, சொத்துத் தகராறு, முன்விரோதம், பழிவாங்கும் மனநிலை, போதைப்பொருள் பயன்பாட்டின் தாக்கமாகவும் இருக்கலாம்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட சட்டத்தின் மீது பயமில்லாதது, சிலரின் ஆதிக்கத்தின்கீழ் காவல்துறையின் செயல்பாடு, போதைக் கலாசார வளர்ச்சி போன்றவையும், சமூகக் கட்டுப்பாடு குறைதல், சாதிய அடையாளம், நிலம் மற்றும் அதிகாரத்தின் மீதான போட்டி, கலப்புத் திருமணத்துக்கு எதிர்ப்பு, உள்ளூர் அதிகாரப் போட்டி, அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கம், சமூக வலையமைப்புகளின் தாக்கம் போன்ற பல்வேறு சமூக காரணிகளும் குற்றங்களுக்குப் பின்னணியாக இருக்கலாம். எனவேதான், 2026 ஜூலை 30–ல் நடைபெற்ற காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டில் காவல்துறையின் பணி என்பது குற்றவாளிகளைக் கைது செய்து விடுவதோடு முடிந்துவிடக் கூடாது. குற்றம் உருவாகும் சூழலைக் கண்டறிந்து, அந்தக் குற்றம் நடைபெறுவதற்கு முன்பே தடுப்பதை காவல்துறை இலக்காகக் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தியுள்ளேன்.

ஒவ்வொரு காவல் நிலையமும் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்றும், ஒவ்வொரு கிராமத்திலும் வார்டிலும் தெருவிலும் நிலவும் பிரச்னைகள் குறித்து காவல்துறையினர் முன்கூட்டியே அறிந்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது” என்று தெரிவித்தார்.

**எதிர்க்கட்சிகள் போல அரசியல் செய்ய விரும்பவில்லை!**

முதல்வர் ஜோசப் விஜய் பேசுகையில், எதிர்க்கட்சிகள் போல எனக்கு அரசியல் செய்ய விருப்பமில்லை. தமிழகத்தின் சட்டம் – ஒழுங்கு நிலை குறித்து பேரவையில் எதிர்க்கட்சிகள் வைக்கும் கருத்தைக்கூட, மக்கள் மீது அவர்களுக்குள்ள கவலையை வெளிப்படுத்துவதாகவே இந்த அரசு எடுத்துக் கொள்கிறது.

உள்நோக்கத்துடன் கூடிய கருத்தாக இருந்தாலும்கூட, அதிலும் உண்மை இருக்கிறதா என்று பரிசீலிக்கப்படுகிறது.

குற்றங்களுக்கு போதை கலாசாரம்தான் காரணம் என கண்டறியப்பட்டு போதைக் கலாசாரத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தவெக ஆட்சிக்கு வந்தது முதல் 4 ஆயிரம் கிலோவுக்கு மேல் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

தமிழக முதல்வராக பதவியேற்ற நாள் முதல் ஊழலற்ற நிர்வாகம் என்பதில் உறுதியாக உள்ளேன். இளம் வயதினர் குற்றங்களில் ஈடுபடுவது அதிகரித்திருக்கிறது. அதனையும் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழ்நாட்டின் சட்டம் – ஒழுங்கு குறித்து பேசும் எதிர்க்கட்சியினருக்கு, கடந்த 2021 – 25–ஆம் ஆண்டு கால குற்றங்களை பட்டியலிட்டுவிட்டுச் சென்றுவிட எனக்கு விருப்பமில்லை என்றும் விஜய் கூறியுள்ளார்.

அரசியல் ரீதியாக எந்தக் கருத்துகளையும் கூறலாம். ஆனால் தனிப்பட்ட தாக்குதல்கள் பேசக் கூடாது. ஆர்த்தோ சர்ஜன் போல பேரவைக்குள்ளேயே எலும்பை உடைப்பேன் என்று ஒரு எம்எல்ஏ பேசுகிறார். சட்டப்பேரவையில் எலும்பை உடைப்பேன் என்று பேச்சு எதற்கு இதுதான் அரசியலா? இப்படிப் பேசி பேசித்தானே, இன்று அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

திமுகவினருக்கு அட்வைஸ் கூற வேண்டாம் என்று எதிர்க்கட்சிகள் கோஷம் எழுப்பியதைத் தொடர்ந்து திமுகவினருக்கு அறிவுரை கூற நான் வரவில்லை என்று முதல்வர் விஜய் பதில் கூறினார்.

தொடர்ந்து பேசிய முதல்வர் விஜய், மற்றொரு சட்டப்பேரவை உறுப்பினர் கூறுகிறார், திமுகவுக்கு வாக்களிக்காதவர்களுக்கு நல்ல சாவே வராது என்று கூறுகிறார். மக்களின் தீர்ப்பை ஏற்காத நீங்கள் ஏன் அரசியலில் இருக்க வேண்டும் என்றும் கேள்வி எழுப்பினார்.

இதனால் அவையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

மேலும் பேசிய விஜய், இது குறித்துக் கேட்டால், அரசியலில் பல காலமாக இருப்பவர்கள் என்ன கூறுகிறார்கள் என்றால், நாங்கள் அந்தக் காலத்தில் பேசாத பேச்சா என்று கேட்கிறார்கள். ஜெயலலிதா எதிர்க்கட்சியினரால் பல அவமானங்களை சந்தித்தார். அந்தக் காலத்தின் துருப்பிடித்த அரசியல் நமக்கு எதற்கு? நமது நண்பர்கள் எது பேசினாலும் நாங்கள் மிசாவைப் பார்த்தவர்கள் என்று கூறுகிறார்கள். மிசாவைப் பற்றி அனைவருக்கும் தெரியும் என்றும் விஜய் குறிப்பிட்டுப் பேசினார்.

## எதிர்க்கட்சித் தலைவரை பேச அனுமதிக்காதது ஏன்? சபாநாயகர் விளக்கம்!

சென்னை, செப். 07–

தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் முக்கிய விவகாரம் தொடர்பாக பதிலுரை வழங்கியபோது, அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிலளிக்க முயன்றார். ஆனால், அவரை பேசுவதற்கு சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் அனுமதிக்கவில்லை. இதனால் சட்டப்பேரவையில் பரபரப்பான சூழல் ஏற்பட்டது.



முதல்வரின் பதிலுரைக்கு எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து தொடர்ந்து குறுக்கீடுகள் ஏற்பட்டதாகவும், இதனால் அவையில் குழப்பமான நிலை உருவானதாகவும் சபாநாயகர் தெரிவித்தார். சட்டப்பேரவை நடவடிக்கைகள் விதிமுறைகளின்படியே நடைபெற வேண்டும் என்றும், ஒருவருக்கு பேச அனுமதி வழங்கப்பட்டுள்ள நேரத்தில் மற்றவர்கள் குறுக்கிடக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முதல்வர் தனது பதிலுரையை வழங்கிக் கொண்டிருந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் உடனடியாக பதிலளிக்க முயன்றதாக கூறப்படுகிறது. ஆனால், முதல்வரின் உரை நிறைவடைந்த பின்னர் விதிமுறைகளின்படி வாய்ப்பு வழங்குவது தொடர்பாக முடிவு செய்யப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

இதனிடையே, தங்களது தரப்புக்கு பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று திமுக உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் ஆளும் தரப்புக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து திமுக உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். எதிர்க்கட்சித் தலைவர் பேச அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணத்தை சபாநாயகர் விளக்கியதையடுத்து, சட்டப்பேரவை நடவடிக்கைகள் மீண்டும் தொடர்ந்தன. ஆளும் தரப்பினர் மற்றும் எதிர்க்கட்சியினர் இடையே ஏற்பட்ட இந்த மோதல், பேரவை நிகழ்வுகளில் பரபரப்பை ஏற்படுத்தியது. சட்டப்பேரவையில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் தங்களது கருத்துகளை பதிவு செய்ய உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ள நிலையில், இந்த விவகாரம் அரசியல் வட்டாரத்திலும் கவனம் பெற்றுள்ளது.

## அக்டோபர் 7’-ஐ மிஞ்சுமா? ஈரானின் அடுத்த அதிரடி? நடுங்கும் உலகம்!

புதுடெல்லி, செப். 07–

இஸ்ரேல் மீது ஒரே நேரத்தில் பல முனைகளில் இருந்து மிகப்பெரிய ஒருங்கிணைந்த தாக்குதலை நடத்த ஈரான் திட்டமிட்டு வருவதாக இஸ்ரேலிய உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த அக்டோபர் 7 தாக்குதலைவிட அதிக ஒருங்கிணைப்புடன் இந்தத் தாக்குதல் நடத்தப்படலாம் என கூறப்படுகிறது.

ஈரானின் நேரடி ராணுவப் படைகளுடன் ஹிஸ்புல்லா, ஹமாஸ், யேமனின் ஹூதிகள் மற்றும் ஈரான் ஆதரவு பெற்ற ஈராக் போராளிகளை ஒரே போர்க்கள இயக்கமாக செயல்பட வைக்கும் முயற்சி நடைபெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


அக்டோபர் 7 தாக்குதலின்போது இந்த அமைப்புகள் ஒரே நேரத்தில் முழுமையாக ஒருங்கிணைந்து செயல்படவில்லை. தற்போது அந்த இடைவெளியை சரிசெய்ய ஈரான் முயற்சிப்பதாக கூறப்படுகிறது.



மேலும், ஹமாஸின் புதிய தலைவர் கலீல் அல்–ஹய்யா ஈரானுடன் நெருக்கமான உறவு கொண்டவர் என்பதும் குறிப்பிட த்தக்கது. ஈரான் ஆதரவுடன் ஹமாஸ், ஹிஸ்புல்லா உள்ளிட்ட அமைப்புகள் இஸ்ரேலின் வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அழுத்தத்தை அதிகரித்து வருவதாகவும் ஐடிஎஃப் உளவுத்துறை மதிப்பீடு தெரிவித்துள்ளது.

த தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 07.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 21-ம் தேதி

## சூப்பர் AI வளர்ச்சிக்கு தடை?



மனிதர்களின் கட்டுப்பாட்டை மீறி செயற்கை நுண்ணறிவு (AI) வளர்ந்தால் பேராபத்து ஏற்படலாம் என்ற அச்சம் அதிகரித்துள்ள நிலையில், சூப்பர் AI வளர்ச்சிக்கு தற்காலிக தடை விதிக்க வேண்டும் என அமெரிக்காவில் கோரிக்கை வலுத்துள்ளது.

அமெரிக்க செனட்டர் பெர்னி சாண்டர்ஸ், OpenAI தலைவர் சாம் ஆல்ட்மேன், Anthropic தலைவர் டாரியோ அமோடி, Meta நிறுவனத்தின் மார்க் ஜுக்கர்பெர்க் உள்ளிட்ட AI நிறுவனங்களின் தலைவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். மனிதகுல நலனுக்காக AI வளர்ச்சியை தற்காலிகமாக நிறுத்தவும், மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாத இயந்திரங்களை உருவாக்குவதை நிறுத்தவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

AI நிறுவனங்கள் ஆபத்தான நிலையை எட்டினால் அதன் வளர்ச்சியை நிறுத்துவதாக அமெரிக்க அரசிடம் ஏற்கனவே வாக்குறுதி அளித்திருப்பதையும் சாண்டர்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், நிறுவனங்கள் பில்லியன் கணக்கில் முதலீடு செய்து AI வளர்ச்சியை வேகப்படுத்துவதாக அவர் விமர்சித்துள்ளார்.

மேலும், AI மூலம் ஆபத்தான வைரஸ்கள் உருவாக்கப்படலாம், சில AI மாடல்கள் சோதனைகளில் தன்னிச்சையாக செயல்பட்டதாகவும் அவர் எச்சரித்துள்ளார். OpenAI–யின் Astra AI மாடல் இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், சாண்டர்ஸ் மற்றும் அலெக்ஸாண்ட்ரியா ஒகாசியோ–கார்டெஸ் ஆகியோர் AI டேட்டா சென்டர் கட்டுமானங்களுக்கு தடை கோரி ஏற்கனவே மசோதா கொண்டுவந்துள்ளனர். தற்போது சூப்பர் AI உருவாக்கத்துக்கு தடை விதிக்கவும், புதிய மத்திய ஒழுங்குமுறை அமைப்பு செயல்படும் வரை மேம்பட்ட AI ஆய்வுகளை நிறுத்தவும்புதிய மசோதா கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த விதிகளை மீறும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்கும் வகையில் சட்டம்கொண்டுவரவேண்டும்என்றும்வலியுறுத்தப்பட்டுள்ளது.

மனிதர்களை மிஞ்சும் AI வளர்ச்சி உண்மையிலேயே பேராபத்தா? என்ற விவாதம் அமெரிக்க அரசியல் மற்றும் தொழில்நுட்ப உலகில் தீவிரமடைந்துள்ளது.

## வாகன ஓட்டிகளே உஷார்!



சென்னை, செப். 07–

கேரள மாநிலம் திருச்சூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் விதிமுறைகளை மீறி நிறுத்தப்பட்டிருந்த சரக்கு லாரி மீது கார் மோதிய கோர விபத்தில் 8 கல்லூரி மாணவர்கள் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில், மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நெடுஞ்சாலையில் சட்டவிரோதமாக லாரியை நிறுத்துவது மிகப்பெரிய விதிமீறல் என தெரிவித்த அவர், இந்த விவகாரம் தொடர்பாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் கடுமையாக வலியுறுத்தியுள்ளதாக கூறினார்.

மேலும், சாலையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறப்பதற்கான நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டதா என்றும் கேள்வி எழுப்பினார். வாகனப் பாதை மாற்றம் உள்ளிட்ட இடங்களில் போதிய வழிகாட்டி அறிவிப்புப் பலகைகள் வைக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். இனி நெடுஞ்சாலைகளில் தீவிர கண்காணிப்பு மற்றும் 24 மணி நேர ரோந்து பணிகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார். விதிமுறைகளை மீறி வாகனங்களை நிறுத்துவோருக்கு ரூ.25,000 முதல் ரூ.50,000 வரை அபராதம் விதிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நெடுஞ்சாலையில் அஜாக்கிரதையாக வாகனங்களை நிறுத்துவோர் மீது இனி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## இந்தியா-பிரான்ஸ் உறவு புதிய உச்சம்!




புதுடெல்லி, செப். 07–

பாரிஸில் சுவாமிநாராயண் கோவில் திறப்பு விழாவில் வீடியோ கான்பரன்ஸ் மூலம் பேசிய பிரதமர் மோடி, இந்தியாபிரான்ஸ் உறவுகள் புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக தெரிவித்தார். கலாசாரம், தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, பாதுகாப்பு, விண்வெளி, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்பட்டு வருவதாக கூறினார்.

மேலும், 2026 இந்தியாபிரான்ஸ் புத்தாக்க ஆண்டாக கொண்டாடப்படுவதாகவும், பாரிஸ் சுவாமிநாராயண் கோவில் இரு நாடுகளின் கலாசார உறவுகளுக்கு முக்கிய மைல்கல்லாக அமையும் என்றும் மோடி குறிப்பிட்டார்.

## செப்.8-ல் காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம்!




புதுடெல்லி, செப். 07–

காவிரி நீர் பங்கீடு தொடர்பாக, காவிரி மேலாண்மை ஆணையத்தின் 56–வது கூட்டம் செப்.8–ம் தேதி டெல்லியில்நடைபெற உள்ளது. ஆணையத் தலைவர் எஸ். கே. ஹல்தர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், முந்தைய உத்தரவுகள் செயல்படுத்தப்பட்ட விதம், தமிழகத்துக்கு திறக்கப்பட்ட நீரின் அளவு, கர்நாடக அணைகளின் நீர்மட்டம் மற்றும் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை உள்ளிட்டவை தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட உள்ளன. இதற்கிடையே, தமிழகத்துக்கு கூடுதல் காவிரி நீரைத் திறக்க வேண்டும் என தமிழகம் தரப்பில் கோரிக்கை வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காவிரி நீர் திறப்பு தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், இரு மாநிலங்களும் நீர் திறப்பு குறித்த அறிக்கையை தாக்கல் செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டு, வழக்கை செப்.15–ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

## பழனி சண்முக நதியை தூய்மைப்படுத்த ரூ1 கோடியே 75 லட்சத்தில் திட்டம்: அமைச்சர் விக்னேஷ்!




பழனி, செப். 07–

பழனிக்கு நேற்று தமிழக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் வந்திருந்தார். அப்போது அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறி இருப்பதாவது

பழனியில் பள்ளி அரசு அலுவலகங்கள் அருகில் உள்ள டாஸ்மார்க் மதுக்கடைகளை மாற்றுவது குறித்து சட்டமன்றத்தில் பேசி உள்ளேன். பொது மக்களுக்கு இடையூறாக உள்ள டாஸ்மாக் மதுக்கடைகள் இடம் மாற்றம் செய்யப்படும். பழனியில் ரயில்வே பீடர் ரோடு பகுதியில் உள்ள டாஸ்மார்க் கடை இடம் மாற்றம் செய்யப்படும். பழனி சண்முக நதியை தூய்மைப்படுத்த ஒரு கோடி 75 லட்சத்தில் திட்டம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திண்டுக்கல் கல்லூரி மாணவர்கள் விபத்தில் இறந்தது பெரும் வருத்தத்தை அளிக்கிறது. இது பற்றி முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நிவாரணம் வழங்கப்படும். தமிழ்நாட்டில் கள்ளுக்கடைகள் திறப்பதில் உள்ள சாதகங்கள் பாதங்கள் குறித்து முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. கள்ளுக்கடைகள் பற்றி முழு ஆய்வுகள் செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார். இதில் மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி பாலன், நகர செயலாளர் மிதுன் மனோகரன், ஜே பி எஸ் சஞ்சய் ஆகியோர் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## வார தொடக்கத்தில் குறைந்த தங்கம் விலை!



சென்னை, செப். 07–

வார தொடக்கமான இன்றும் தங்கம் விலை குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.480 ஒரு சவரன் ரூ.1,13,020–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.60 குறைந்து, ஒரு கிராம் ரூ.14,130க்கு விற்பனை செய்யப்படுகிறது. 5–வது நாளாக வெள்ளி விலையில் மாற்றமில்லை. அதன்படி, ஒரு கிராம் வெள்ளி ரூ.255–க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## மத்திய அரசு ஊழியர்களுக்கு ஜாக்பாட்!




புதுடெல்லி, செப். 07–

இந்தியாவில் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பெரிதும் எதிர்பார்த்து வரும் 8வது சம்பள கமிஷன்தொடர்பான முக்கிய ஆலோசனை கூட்டம் சென்னையில் செப்டம்பர் 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் 2 நாட்கள்நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் மத்திய அரசு ஊழியர்களின் சம்பள உயர்வு, ஓய்வூதியம், பல்வேறு கொடுப்பனவுகள் உள்ளிட்டவை குறித்து கருத்துகள் கேட்கப்பட உள்ளன. குறிப்பாக, அரசு ஊழியர்கள் நீண்டகாலமாக எதிர்பார்க்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) மீண்டும் அமல்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பழைய ஓய்வூதியத் திட்டத்தில் கடைசியாக பெற்ற சம்பளத்தில் 50% ஓய்வூதியமாக வழங்கப்படும் நிலையில், அதை 67% ஆக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையும் முக்கிய விவா தமாக இருக்கலாம்.

சென்னை கூட்டம், மத்திய அரசு ஊழியர்கள்மற்றும்ஓய்வூதியதாரர்களிடம் கருத்துகளை கேட்கும் 8வது சம்பள கமிஷனின் நாடு தழுவிய ஆலோசனைப் பயணத்தின் ஒரு பகுதியாகும். ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையிலான குழு ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை ஜெய்ப்பூர், சென்னை, புதுச்சேரி, சண்டிகர், பெங்களூரு, மும்பை உள்ளிட்ட நகரங்களில் கருத்து கேட்கிறது.

**ஓய்வூதியம் எவ்வளவு உயரும்?**

பிட்மெண்ட் ஃபேக்டர் 2.15, 2.28 அல்லது 2.57 என நிர்ணயிக்கப்பட்டால், லெவல் 4 முதல் 7 வரையிலான ஊழியர்களின் குறைந்தபட்ச ஓய்வூதியம் உயர வாய்ப்புள்ளது.

லெவல் 4: ₹12,750 ₹27,413₹32,768
லெவல் 5: ₹14,600 ₹31,390₹37,522
லெவல் 6: ₹17,700 ₹38,055₹45,489
லெவல் 7: ₹22,450 ₹48,268₹57,697

முக்கிய குறிப்பு: மேற்கண்ட ஓய்வூதியத் தொகைகள் அதிகாரப்பூர்வ அறிவிப்பு அல்ல. பிட்மெண்ட் ஃபேக்டரை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட மதிப்பீடுகள் மட்டுமே.

## அடேங்கப்பா! ரூ.47,000-க்கு டூத் பிரஷ்.. AI, கேமரா, மவுத்வாஷ் ஸ்பிரே என அசத்தல்!



புதுடெல்லி, செப். 07–

உலகப் புகழ்பெற்ற Dyson நிறுவனம், வாயின் உட்பகுதியை கண்காணிக்கும் கேமரா, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தானியங்கி மவுத்வாஷ் ஸ்பிரே வசதியுடன் 'CameraJet' என்ற அதிநவீன எலக்ட்ரிக் டூத் பிரஷை அறிமுகப்படுத்தியுள்ளது. செப்டம்பர் 1–ம் தேதி பாரிஸில் அறிமுகமான இதன் விலை 499.99 டாலர் (சுமார் ரூ.47,000).

சுமார் 6 ஆண்டுகள் ஆராய்ச்சிக்குப் பிறகு உருவாக்கப்பட்ட இந்த பிரஷில் 1 லட்சம் பிக்சல் மேக்ரோ கேமராபொருத்தப்பட்டுள்ளது. இது ஒரு நொடிக்கு 28 படங்களை எடுத்து, பற்களுக்கு இடையிலான இடுக்குகளை AI மூலம் கண்டறிகிறது. இடுக்குகள் கண்டறியப்பட்டதும், 'Gap Optical Targeting' தொழில்நுட்பம் மூலம் 100 மில்லி விநாடிகளில் மவுத்வாஷை தெளித்து, பல் துலக்குவதுடன் ஃப்ளாசிங்பணியையும்மேற்கொள்கிறது. Wi–Fi, Bluetooth மூலம் MyDys–on செயலியுடன் இணைத்து, வாயின் உட்பகுதியை நேரலையில் பார்க்கவும், சுத்தம் செய்யப்பட்ட பகுதிகளை வரைபடமாக அறியவும் முடியும். கேமரா இயங்கும் நேரங்களில் மட்டும் செயல்படும் என்றும், படங்கள் சேமிக்கப்படாது என்றும் Dyson தெரிவித்துள்ளது.

இருப்பினும், ரூ.47,000 விலை கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது. சாதாரண டூத் பிரஷை விட உண்மையில் இது எந்த அளவுக்கு சிறந்தது என்பது குறித்து மேலும் ஆய்வுகள் தேவை என பல் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிறையில் இருந்தவர்கள் போராட்டத்தில்? காவல்துறைக்கு சிக்கிய 'குற்ற ஜாதகம்'!




புதுடெல்லி, செப். 07–

டெல்லி ஜந்தர் மந்தரில் ஜூலை 20 முதல் 26 வரை நடைபெற்ற மாணவர் போராட்டத்தில் 2,873 பேர் குற்றப் பின்னணி கொண்டவர்கள் என காவல்துறை தெரிவித்தது. முகஅடையாள தொழில்நுட்பம் (FRS) மூலம் இவர்களை அடையாளம் கண்டதாகவும், இதில் 2,402 பேர் 'Crime Kundli' தரவுத்தளத்தின் மூலமும், 471 பேர் ஏற்கெனவே உள்ள குற்றப் பதிவுகள் மூலமும் கண்டறியப்பட்டதாகவும் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தது.

மேலும், 205 பேர் கடுமையான குற்ற வழக்குகளை எதிர்கொள்பவர்கள் என கூறப்பட்டது. இவர்களில் 101 பேர் கொலை, 61 பேர் பாலியல் வன்கொடுமை, 6 பேர் போக்சோ, 37 பேர் கொலை முயற்சி வழக்குகளில் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ஒரு பிரபல நாளிதழ் மேற்கொண்ட ஆய்வில், அந்த 205 பேரில் குறைந்தது 25 பேர் அதே காலகட்டத்தில் திகார், மண்டோலி மற்றும் ரோஹிணி சிறைகளில் இருந்தது தெரியவந்துள்ளது. இதனால், சிறையில் இருந்தவர்கள் எப்படி ஜந்தர் மந்தர் போராட்டத்தில் இருந்ததாக முகஅடையாள கேமராக்கள் கண்டறிந்தன என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதனால் முகஅடையாள தொழில்நுட்பத்தின் துல்லியம், 'Crime Kundli' தரவுகளின் நம்பகத்தன்மை மற்றும் 2,873 பேர் பட்டியல் முழுமையாக சரிபார்க்கப்பட்டதா ?என்பது குறித்து டெல்லி காவல்துறை மற்றும் மத்திய அரசிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.



## தொழில் / நிதி பிரச்சனை நீங்க வாஸ்துகள்!



செல்வம் மற்றும் நிதி பிரச்சனைகளுக்கு குங்குமம் மற்றும் மஞ்சள் முக்கிய பங்கு வைப்பதாக ஜோதிடம் கூறுகிறது. குங்குமம் மற்றும் மஞ்சள் ஆகிய இரண்டும் குருவுக்கு உகந்ததாக கூறப்படுகிறது. வியாழன், அதிர்ஷ்டம், அறிவு, வளர்ச்சி, நிதானம் மற்றும் செல்வம் ஆகியவற்றை வழங்குபவர். ஜோதிடத்தில் குங்குமப்பூ மஞ்சளின் வைத்து செய்யும் சில பரிகாரங்கள் அதிர்ஷ்டத்தை வலுப்படுத்துவதுடன், பணம் தொடர்பான பிரச்சனைகளை நீக்கவும் உதவுவதாக கூறப்படுகிறது. இது குறித்த விரிவான தகவலை இங்கே காணலாம்.

இயற்கையாக குங்குமப்பூ மற்றும் மஞ்சள் ஆகிய இரண்டும் இந்திய உணவுகளில் முக்கிய பங்கு வகுக்கிறது. இது, சுவையை அதிகரிப்பது மட்டும் அல்லாது கிருமி நாசினி மற்றும் ஆரோக்கியத்திற்கும் முக்கிய பொருளாக கருதப்படுகிறது. ஜோதிடத்தின் படி, இவை மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தின் வளர்ச்சிக்கான காரணிகளாகக் கருதப்படுகின்றன.

வேத ஜோதிடத்தில், குங்குமப்பூ அன்னை லட்சுமி மற்றும் குரு தொடர்புடையதாக கருதப்படுகிறது. வியாழன் அதிர்ஷ்டம், அறிவு, தொழில், செழிப்பு போன்றவற்றின் காரணியாக உள்ளார். உங்கள் வாழ்க்கையில் பணம் அல்லது தொழில் தொடர்பான பிரச்சனைகள் இருந்தால், அதை போக்குவதற்கான எளிமையான பரிகாரத்தை நீனாகில் உங்களுக்கு கூறுகிறோம். இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

**மகிழ்ச்சியும் செழிப்பும் அதிகரிக்க...**

வெள்ளிக் கிழமையன்று லட்சுமி தேவியை வழிபட்டு, ஒரு வெள்ளி நாணயத்தில் மஞ்சள் பூசி, பூஜை அறையில் தேவியின் படத்திற்கு அருகில் வைக்கவும். பின்னர், அந்த நாணயத்தை ஒரு சிவப்பு துணியில் கட்டி, லாக்கர் அல்லது அலமாரியில் வைக்கவும். இவ்வாறு செய்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சியும், செழிப்பும் பெருகுவதோடு, லட்சுமி தேவியின் அருளும் உங்களுக்கு கிடைக்கும்.

**வாழ்க்கையில் முன்னேற இதை செய்யுங்கள்**

மாதத்தின் அஷ்டமி திதியில் பிரம்மமுஹூர்த்தத்தில் எழுந்து நீராடி, தியானம் செய்துவிட்டு சுத்தமான ஆடைகளை அணிந்து கிழக்கு திசையில் அமர வேண்டும். பின்னர், அன்னை லட்சுமியின் சிலை அல்லது படத்தின் முன் அமர்ந்து, விதிமுறைகளின்படி அதை வணங்கி, அன்னைக்கு கருப்பு மஞ்சள் கட்டியை சமர்ப்பிக்கவும்.

தினமும் அன்னை லட்சுமியுடன், கருப்பு மஞ்சள் முடிச்சையும் வணங்குங்கள். இதை, உங்கள் அலமாரி மற்றும் பணப்பையிலும் வைத்துக்கொள்ளுங்கள். இவ்வாறு செய்வதன் மூலம் பணம் தொடர்பான பிரச்சனைகள் நீங்கி தொழில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**குங்குமத் திலகம் வைப்பதால் கிடைக்கும் நன்மை**

வியாழன் தோறும் குங்குமத் திலகம் பூசுவது மிகவும் நன்மை பயக்கும் என்று ஜோதிடம் கூறுகிறது. இதை செய்வதன் மூலம், கவர்ச்சி, அழகு, செல்வம் அடையப்படுகிறது மற்றும் நேர்மறை ஆற்றல் பராமரிக்கப்படுகிறது என்று நம்பப்படுகிறது. ஜோதிடத்தின்படி, குங்குமத் திலகம் மகாதேவன், விஷ்ணு, விநாயகர் மற்றும் தாய் லட்சுமி ஆகியோரை மகிழ்விக்கிறது. இதனுடன் இரண்டு மொட்டு குங்குமப்பூவை பாலில் கலந்து இரவில் குடிப்பதால் ஆரோக்கியமும், அமைதியும், நீண்ட ஆயுளும், தைரியமும் பெருகும்.

**திருமணம் குறித்து கனவு கண்டால்**
**அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா?**
**இதை செய்தால் வாஸ்து தோஷம் நீங்கும்**

தினமும் வீட்டின் பிரதான வாசலில் தண்ணீரில் மஞ்சள் கலந்து தெளிக்க வேண்டும். இப்படி செய்வதால் லட்சுமி தேவி வீட்டிற்குள் நுழைவதோடு, வாஸ்து தோஷங்களும் விலகும். இதனுடன், எதிர்மறை ஆற்றலும் அகற்றப்பட்டு, குடும்ப உறுப்பினர்களிடையே பரஸ்பர அன்பு நிலைத்திருக்கும். அத்துடன் வீட்டில் ஏதாவது தீய சக்திகள் இருந்தால் அவை முதிர்களும் அகற்றப்படும்.

**பாம்பு குறித்த கனவு வந்தால் என்ன அர்த்தம்?**


மஞ்சளை மற்றவர்களுக்கு கடன் கொடுக்க வேண்டாம்

கடை மற்றும் வேறு இடங்களில் இருந்து நீங்கள் மஞ்சளை வியாழக்கிழமை வாங்குவது நல்ல பலனை கொடுக்கும். ஆனால், இந்த நாளில் மற்றவர்களுக்கு மஞ்சளை தானமாகவோ அல்லது கடனாகவோ கொடுப்பது நல்லதல்ல. வியாழன் அன்று மஞ்சளை வீட்டிற்கு வாங்கி வருவது வியாழனின் சுப பலன்களை அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. அதே நேரத்தில் மஞ்சள் கொடுப்பதால் வியாழனின் தாக்கம் குறைவைத்தால், செல்வத்தின் செழிப்பும் குறையும்.

**சிவலிங்க அபிஷேகம் செய்யவும்**

வியாழன் அன்று பாலில் குங்குமம் அல்லது மஞ்சள் கலந்து சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அறிவும், புத்திசாலித்தனமும் பெருகுவதோடு, லட்சுமி தேவியின் அருளும் கிடைக்கும். வீட்டில் சிவ லிங்கத்தை வைக்க கூடாது என சிலர் கூறுவது உண்டு. ஆனால், பூஜை அறை தனியாக இருந்தால் லிங்கம் வைத்து வழிபடுவது நல்ல பலனை கொடுக்கும். தினமும் லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வது உங்களுக்கு நல்ல பலனை வழங்கும்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## எந்த உணவு எந்த உறுப்புக்கு நல்லது? தினமும் சேர்க்க வேண்டிய உணவுகள்!



நவீன உணவுப் பழக்கம், மாசுபாடு, பதப்படுத்தப்பட்ட உணவுகள் உள்ளிட்ட காரணங்களால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். இதைத் தவிர்க்க இயற்கையான காய்கறிகள், கீரைகள், பழங்கள் மற்றும் மூலிகைகளை உணவில் சேர்ப்பது பயனுள்ளதாக இருக்கும்.

**கல்லீரல்:** வேம்பு நச்சுகளை வெளியேற்ற உதவும் என கூறப்படுகிறது.

**குடல்:** நார்ச்சத்து நிறைந்த பப்பாளி செரிமானத்தை சீராக வைத்திருக்க உதவும்.

**சிறுநீரகம்:** அதிக நீர்ச்சத்து கொண்ட வெள்ளரிக்காய் உடலின் நீர்ச்சத்து சமநிலைக்கு உதவும்.

**கண்கள்:** பீட்டா கரோட்டீன் நிறைந்த கேரட் கண் ஆரோக்கியத்திற்கு உதவும்.

**இதயம்:** பூண்டு இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கக்கூடும்.

**எலும்புகள்:** செலரி கீரை உள்ளிட்ட கீரைகள் ஊட்டச்சத்துகளை வழங்குகின்றன.

**மூளை:** குர்குமின் கொண்ட மஞ்சள் மூளை ஆரோக்கியத்திற்கு உதவக்கூடும்.

**ரத்த ஓட்டம்:** திராட்சை மற்றும் பீட்ரூட் போன்றவை ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் ஊட்டச்சத்துகளை வழங்குகின்றன.

**சுவாசம்:** புதினா சுவாசப்பாதைக்கு புத்துணர்வு அளிக்க உதவும்.

**செரிமானம்:** கிராம்பு அஜீரணத்தை குறைக்க உதவக்கூடும்.

**கழிவுகள் வெளியேற்றம்:** கொத்தமல்லி மற்றும் வெந்தயம் உடல் செயல்பாடுகளுக்கு ஆதரவாக இருக்கலாம்.

மேலும், வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் நிறைந்த பச்சைக் கீரைகளை தினசரி உணவில் சேர்ப்பது ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

இயற்கை உணவுகள் ஆரோக்கியமான உணவுமுறையின் ஒரு பகுதியாக இருந்தாலும், அவை உடலில் உள்ள நச்சுக்களை முழுமையாக "சுத்தம்" செய்யும் என்ற கூற்றுக்கு உறுதியான மருத்துவ ஆதாரம் இல்லை. உடலின் கழிவுகளை வெளியேற்றுவதில் கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களே முக்கிய பங்கு வகிக்கின்றன.

# உள்ளாட்சி தேர்தலுக்கு தயாராகும் த.வெ.க. - மாநகராட்சிகளை முன்கூட்டியே கலைக்க திட்டம்...!



சென்னை, செப். 07–

தமிழக சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தாலும், தமிழ்நாட்டில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் தி.மு.க. வலுவான ஆதிக்கத்தை செலுத்தி வருகிறது. இதனால், எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க.வை எதிர்கொண்டு உள்ளாட்சி அமைப்புகளை கைப்பற்ற த.வெ.க. தீவிரமாக தயாராகி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம், மார்ச் வரை இருந்தாலும், மாநகராட்சிகளை மட்டும் முன்கூட்டியே கலைக்க த.வெ.க. அரசு திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான அறிவிப்பு சட்டசபை கூட்டத்தொடர் முடிந்ததும் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநகராட்சிகளில் தனி அதிகாரிகளை நியமித்து, த.வெ.க., கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கும், அதன்பிறகு, ஆறு மாதங்களுக்குள் உள்ளாட்சி தேர்தலை நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து த.வெ.க.வை சேர்ந்தவர்கள் கூறுகையில், "மாநகராட்சி, நகராட்சிகளில் தி.மு.க.வினர் நடத்திய ஊழல்களை முன்வைத்து உள்ளாட்சி தேர்தலில் களம் இறங்க த.வெ.க. தயாராகி வருகிறது.

அதனால்தான், நகராட்சி துறை டெண்டர்கள் முறைகேடு புகார் மீது அதிக கவனம் செலுத்துகிறது. இது குறித்து, முதல்–அமைச்சர் விஜய்யின் கவனத்துக்கு த.வெ.க., மூத்த அமைச்சர்கள் கொண்டு சென்றுள்ளனர். முதல்–அமைச்சர் இறுதி முடிவு எடுப்பார்" என்று தெரிவித்துள்ளனர்.

## நிர்மலா சீதாராமன் தலைமையிலான 57-வது ஜி.எஸ்.டி., கவுன்சில் கூட்டம் ஒத்திவைப்பு!



புதுடெல்லி, செப். 07–

வருகிற12ந் தேதி 57வது ஜி.எஸ்.டி., கவுன்சில் கூட்டம் நடைபெற இருந்தது. இந்த நிலையில், இந்த கூட்டம் அக்டோபர் 7ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது;

புதுடெல்லியில் வருகிற 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் பிரிக்ஸ் உச்சி மாநாடு நடைபெற உள்ளது. பல்வேறு நாடுகள் பங்குபெறும் இம்மாநாட்டில் மேற்காசிய நெருக்கடியின் பொருளாதார தாக்கம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட உள்ளன. இதன் காரணமாக மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தலைமையிலான 57வது ஜி.எஸ்.டி., கவுன்சில் கூட்டம் அக்டோபர் 7ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக அக்டோபர் 5 மற்றும் 6 ஆகிய தேதிகளில் உயர் அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கே.என்.நேருவிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விரைவில் விசாரணை!

சென்னை, செப். 07–

தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் ரூ.1,020 கோடி டெண்டர் முறைகேடு தொடர்பாக முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு வீடு மற்றும் அவர் தொடர்புடைய 30 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நேற்று முன்தினம் சோதனை நடத்தினர்.



இந்த சோதனையில் டெண்டர்களில் நடைபெற்ற முறைகேடு தொடர்பான 241 ஆவணங்கள், மின்னணு சாட்சியங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், வழக்கின் புலனாய்வு தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் லஞ்ச ஒழிப்பு போலீசார் தெரிவித்து இருந்தனர். இந்த நிலையில், கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும், அதனடிப்படையில் கே.என்.நேரு, அவரது சகோதரர் உள்ளிட்டோருக்கு சம்மன் அனுப்பி விரைவில் விசாரணை நடத்தப்படும் என்று லஞ்ச ஒழிப்பு போலீஸ் வட்டாரத்தில் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதற்கிடையில் கே.என்.நேரு தன் மீதான இந்த குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

## அமேசான் சரக்கு விமானம் தீப்பிடித்து 5 பேர் பலி!



மியாமி, செப். 07–

அமெரிக்காவின் மியாமி சர்வதேச விமான நிலையத்தில் அமேசான் நிறுவனத்தின் சரக்கு விமானம் ஒன்று ஓடுபாதையை விட்டு விலகிச் சென்று வாகனங்கள் மீது மோதிய விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

போர்ட்டோ ரிகோவின் சான் ஜுவான் நகரில் இருந்து வந்த அமேசான் சரக்கு விமானம், மியாமி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும்போது ஓடுபாதையை விட்டு விலகியது. அப்போது விமானம் அருகில் இருந்த வாகனங்கள் மீது மோதியதில் விபத்துக்குள்ளாகி தீப்பிடித்து. இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 5 பேர் காயமடைந்தனர். அவர்கள் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனையடுத்து, விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.


இந்த விபத்து காரணமாக மியாமி சர்வதேச விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பல விமானங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன.

## கஞ்சி கலயத்தை தலையில் சுமந்து ஊர்வலத்தில் பங்கேற்ற அமைச்சர் கமலி!



நாமக்கல், செப். 07–

ராசிபுரத்தில் மழை பொழியவும், விவசாயம் செழிக்கவும் வேண்டி நடைபெற்ற கஞ்சி கலய ஊர்வலத்தில் தமிழக கால்நடைத்துறை அமைச்சர் கமலி, கஞ்சி கலயத்தை தலையில் சுமந்தபடி பங்கேற்றார். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட செவ்வாடை அணிந்த பக்தர்கள் கலந்து கொண்டனர். ராசிபுரம் ஆதிபராசக்தி பொது மன்றம் சார்பில் மழை பொழியவும், விவசாயம் செழிக்கவும் வேண்டி கஞ்சி கலய ஊர்வலம் நடைபெற்றது. முன்னதாக அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை மற்றும் யாக வேள்வி பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து செவ்வாடை அணிந்த பெண்கள் கஞ்சி கலயம் மற்றும் முளைப்பாரியை தலையில் சுமந்தபடி, ராசிபுரம் நித்திய சுமங்கலி மாரியம்மன் கோவிலில் இருந்து பழைய பேருந்து நிலையம், கடைவீதி வழியாக ஊர்வலமாகச் சென்று, ராசிபுரம் அங்காளம்மன் கோவில் அருகே உள்ள ஆதிபராசக்தி பொது மன்ற கோவிலை சென்றடைந்தனர். இந்த ஊர்வலத்தில் ராசிபுரம் பகுதியைச் சேர்ந்த அவிநாசி சட்டமன்ற தொகுதி உறுப்பினரும், தமிழக கால்நடைத்துறை அமைச்சருமான கமலி கலந்து கொண்டு, கஞ்சி கலயத்தை தலையில் சுமந்தபடி ஊர்வலமாகச் சென்று ஆதிபராசக்தி கோவிலை சென்றடைந்தார். பின்னர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தில் கஞ்சி கலயங்களுக்கு வேப்பிலை கட்டி தீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட செவ்வாடை அணிந்த பக்தர்கள் கலந்து கொண்டனர்.





மாறுவோம் மாற்றுவோம் என்ற வி த லீடர் அமைப்பின் தலைமை தன்னார்வலர் திரு அண்ணாமலை ஐபிஎஸ் அவர்களின் அறிவுறுத்தலின்படி திருப்பூர் தெற்குத் தொகுதிக்கு உட்பட்ட வெள்ளியங்காடு பகுதியில் வி த லீடர்ஸ் அமைப்பைச் சேர்ந்த தன்னார்வலர்கள் குப்பையை வீட்டில் இருந்தே தரம் பிரித்துக் கொடுக்கும் முயற்சியில் 150 வீடுகளுக்கு முதல் கட்டமாக அந்த மக்களிடமே நேரடியாகச் சென்று வீட்டில் இருக்கும் குப்பையை தரம் பிரித்துவீட்டிற்கு சென்று சேகரிக்க வரும் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் இடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஆலோசனைகளை கூறி அனைத்து இல்லங்களுக்கும் வீத லீடர் அமைப்பின் சார்பாக மக்கும் குப்பையை மட்டும் தனியாக வைப்பதற்கு குப்பைத்தொட்டியை வழங்கி உள்ளார்கள். இந்த நிகழ்வில் வி த லீடர் அமைப்பைச் சேர்ந்த தன்னார்வலர்கள்.வெ.துரைராஜ் மணிகண்டன்.வரதராஜ்.கார்த்தி ராமசாமி.சக்தி.நாகராஜ். லட்சுமணன் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.மேலும் திருப்பூர் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட வெள்ளியங்காடு காட்டுவளவு பகுதிகளில் உறுப்பினர் சேர்க்கை முகாம்களும் நடத்தியுள்ளார்கள்.



லட்சிய ஜனநாயக கட்சி மாநில தலைமை அறிவுறுத்தலின்படி உறுப்பினர் சேர்க்கை திருப்பூர் தெற்கு மாவட்ட பல்லடம் அறிவொளி நகர் சார்பாக தெற்கு மாவட்ட செயலாளர் இரா செந்தில் வாண்டையார் தேவர் தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் மாநில துணைப் பொதுச் செயலாளர் குளோபல் பூபதி மற்றும் மாநில முதன்மைச் செயலாளர் திரு கண்ணன் மற்றும் மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் காளிமுத்து வடக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பிரபு தெற்கு மாவட்ட பொருளாளர் குமார் தெற்கு மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி தயா சாந்தி தெற்கு மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் பழனி குமார் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் மாரியப்பன் தொண்டரணி துணை செயலாளர் பாண்டித்துரை 57 வது வார்டு செயலாளர் திரு குமார் பல்லடம் சட்டமன்ற தொகுதி மகளிர் அணி துணைச் செயலாளர் திருமதி சாந்தி தெற்கு சட்டமன்ற தொகுதி தொண்டரணி துணை செயலாளர் சக்திவேல் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## சினிமா துளிகள்..!



### சினிமாவில் இன்று! –ஹாலிவுட் முதல் கோலிவுட் வரை பரபரப்பு!

**US ஹாலிவுட்**

**'ஸ்பைடர் மேன்' தொடர்ந்து 6–வது வாரமும் நம்பர் 1!**

Spider–Man: Brand New Day அமெரிக்க பாக்ஸ் ஆபிஸில் தொடர்ந்து ஆறாவது வாரமாக முதலிடத்தில் உள்ளது. உலகளவில் வசூல் வேகம் தொடர்கிறது; இதன் வெற்றி ஹாலிவுட்டின் 2026 கோடைகால வசூலுக்கும் பெரிய ஊக்கமாக அமைந்துள்ளது.

**IN பாலிவுட்**

**'ஹனுமான் அன்ஷ்' வசூலில் அசத்தல்!**

Hanuman Ansh திரைப்படம் எதிர்பாராத வகையில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. இப்படத்தின் வெற்றி, Mirzapur The Movie போன்ற படங்களின் வரவேற்புடன் இணைந்து, ரசிகர்களின் ரசனையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வெளிப்படுத்துவதாக இயக்குநர் அனுராக் சின்ஹா தெரிவித்துள்ளார்.

**கோலிவுட்**

**'அரசன்' ரிலீஸ் தள்ளிவைப்பு!**

வெற்றிமாறன் இயக்கத்தில் சிம்பு நடிக்கும் 'அரசன்' திரைப்படத்தின் வெளியீடு தள்ளிப்போயுள்ளது. தரத்தில் சமரசம் செய்யாமல் படத்தை முடிக்க அதிக நேரம் எடுத்துக்கொள்ள முடிவு செய்துள்ளதாக சிம்பு தெரிவித்துள்ளார்; தீபாவளியில் 'The World Of Arasan' டீசர் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும்: கார்த்திஎஸ்.ஜே.சூர்யா நடிக்கும் 'சர்தார் 2' செப்டம்பர் 10 வெளியீட்டுக்குத் தயாராகி வருகிறது; பிரபுதேவாஏ.ஆர்.ரஹ்மான் கூட்டணியின் 'Moonwalk' தீபாவளி 2026 வெளியீட்டுக்கு இடம் பிடித்துள்ளது.

### பிக் பாஸ் வரலாற்றில் முதல் முறையாக! தொடங்கும் முன்பே வெளியேற்றம்!




பிக் பாஸ் சீசன் 10 நிகழ்ச்சி இன்று மாலை 6 மணிக்கு தொடங்குகிறது. இந்த சீசனில் முதன்முறையாக, போட்டியாளர்கள் அறிமுக நிகழ்ச்சி மேடையிலேயே வெளியேற்றப்படும் புதிய நடைமுறை அறிமுகமாகியுள்ளது. மூன்று நடிகைகளில் ஒருவரை மட்டும் பிக் பாஸ் வீட்டுக்குள் அனுப்பும் வகையில் பார்வையாளர்கள் வாக்களித்தனர். இதில் ஷாத்திகா, ஷப்னம் ஆகியோர் வெளியேற்றப்பட்டு, லஷ்மிபிரியா பிக் பாஸ் வீட்டுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சீசனில் பொதுமக்களும் கலந்து கொள்ளும் "பிக் பாஸ் காமன் மேன்" நிகழ்ச்சி மூலம் 3 பேர் நேரடியாக சீசன் 10–ல் பங்கேற்க உள்ளனர்.

## வேலை வாய்ப்பு

### தெற்கு ரயில்வேயில் 4,308 வேலைவாய்ப்புகள்! 10–ம் வகுப்பு, ஐடிஐ



தெற்கு ரயில்வேயில் 4,308 அப்ரண்டிஸ் பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது. 10–ம் வகுப்பு, 12–ம் வகுப்பு மற்றும் ஐடிஐ கல்வித் தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பணி: அப்ரண்டிஸ் பயிற்சி

மொத்த காலியிடங்கள்: 4,308

பயிற்சி காலம்: 1 ஆண்டு

கல்வித் தகுதி: 10–ம் வகுப்பு / 12–ம் வகுப்பு / ஐடிஐ

பணியிடங்கள்: சென்னை, மதுரை, திருச்சி, சேலம், பெரம்பூர், பொன்மலை, கோவை, அரக்கோணம், பாலக்காடு, திருவனந்தபுரம் உள்ளிட்ட பகுதிகள்.

விண்ணப்ப தொடக்கம்: 28.08.2026

விண்ணப்பிக்க கடைசி நாள்: 27.09.2026 மாலை 5 மணி

விண்ணப்ப முறை: ஆன்லைன் – https://sr.indianrailways.gov.in/

தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் தெற்கு ரயில்வேயின் அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

### பழனியில் தமிழக வெள்ளாளர் பேரவை சார்பில்

## கல்வித் திருவிழா கந்த விலாஸ் என் செல்வகுமார் பங்கேற்பு!



பழனி, செப். 07–

பழனியில் தமிழக வெள்ளாளர் பேரவை சார்பில் 19 ஆம் ஆண்டு கல்வித் திருவிழா நேற்று நடைபெற்றது. இதற்கு பேரவையின் கௌரவ தலைவரும், பழனி ஸ்ரீ கந்த விலாஸ் அதிபருமான என் செல்வகுமார் தலைமை தாங்கினார். பின்பு அவர் பத்தாம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்ற வெள்ளாளர் சமூக மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் பாராட்டு சான்றிதழ் கேடயம் வழங்கினர். மேலும் முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பரிசாக தங்க நாணயங்களும், மூன்றாம் இடத்தைப் பிடித்த பிடித்த மாணவருக்கு வெள்ளி நாணயம் வழங்கப்பட்டது. இதில் தமிழக வெள்ளாளர் பேரவை சேர்ந்த நிர்வாகிகள் ஆயக்குடி கே டி சிவசுப்பிரமணியன், ஜி பாலமுருகன், ராஜாமணி, துரைசாமி, சண்முகநாதன், பேராசிரியர் சிவ சண்முகம், சிவலிங்கம், ராமநாத கிருஷ்ணன், படக்கடை வீராச்சாமி, தமிழரசன், ஆயக்குடி முத்து, முன்னாள் கோயில் பேஸ்கார் சந்திரசேகர், மற்றும் பில்டிங் காண்ட்ராக்டர் பி நேரு, பெரியநாயகி கல்வி அறக்கட்டளை ஆ சுந்தரம், முன்னாள் கோவில் சூப்பிரண்டு நெய்க்காரப்பட்டி முருகேசன், பொம்ம கடை மணி, கோபி, சோலை தேவர், ஆடிட்டர் பாபவினாசம், ஆடிட்டர் சேகர், வழக்கறிஞர் ராமமூர்த்தி, உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். அனைவருக்கும் விருந்தும் வழங்கப்பட்டது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




# சி. விஜயபாஸ்கர் மீது பண மோசடி புகார்: செப். 15-க்குள் அறிக்கை தாக்கல் செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவு!



சென்னை, செப். 07–

பேரவைத் தேர்தலில் 'சீட்' வாங்கித் தருவதாகக் கூறி வாங்கிய ரூ.4 கோடியைத் திருப்பித் தராமல் ஏமாற்றியதாக முன்னாள் அமைச்சர் சி. விஜயபாஸ்கருக்கு எதிரான செப். 15–க்குள் அறிக்கை தாக்கல் செய்ய காவல்துறைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியைச் சேர்ந்த தனவிமல் தாக்கல் செய்துள்ள மனுவில், சட்டப்பேரவைத் தேர்தலில் ஆலங்குடி தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்ததாகக் கூறியுள்ளார். இதுசம்பந்தமாக அப்போது மாவட்ட செயலாளராக இருந்த முன்னாள் அமைச்சர் சி. விஜயபாஸ்கர், தன்னை மொபைல் போனில் தொடர்பு கொண்டு, தேர்தல் செலவுகளை மேற்கொள்ளும் தகுதியை நிரூபிக்க 5 கோடி ரூபாய் தரும்படி வலியுறுத்தினார்.

மேலும், வேட்பாளர் பட்டியல் அறிவித்ததும் பணத்தை திருப்பித் தந்து விடுவதாக உறுதியளித்ததாகவும் மனுவில் தெரிவித்துள்ளார். அதன்படி, 4 கோடியே 50 லட்சம் ரூபாயை திரட்டி, சி. விஜயபாஸ்கர் குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் சோத்துப்பாலை முருகேசனிடம் கொடுத்ததாகவும், வேட்பாளர் பட்டியலில் தனது பெயர் அறிவிக்கப்பட்ட பின், தேர்தல் செலவுகளுக்காக பணத்தை திருப்பி கேட்ட போது, 50 லட்சம் ரூபாய் மட்டுமே திருப்பித் தந்ததாகவும், மீதமுள்ள தொகையை தராமல் இழுத்தடித்ததாகவும் மனுவில் குற்றம் சாட்டியுள்ளார்.

தற்போது சி. விஜயபாஸ்கர், ஆளும் தவெக–வில் இணைந்துள்ள நிலையில், பணத்தை திருப்பி கேட்ட போது மிரட்டல் விடுத்ததாகவும், இதுசம்பந்தமாக புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மனுவில் குறிப்பிட்டுள்ளார். தனது புகார் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது காவல்துறை தரப்பில், இதுதொடர்பாக மனுதாரர் அளித்துள்ள புகார் மீது ஆரம்பக் கட்ட விசாரணை தொடங்கியுள்ளது. மனுதாரரை வரும் செப்டம்பர் 10–ஆம் தேதி விசாரணைக்கு அழைத்து சம்மன் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, விசாரணையை செப்டம்பர் 15–ஆம் தேதிக்கு தள்ளிவைத்து, அன்றைய தினம் விசாரணையின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை காவல்துறை தாக்கல் செய்ய உத்தரவிட்டார்.

# தமிழக அரசின் தாய் மாமன் திட்டம்: தங்க மோதிர பார்சல் அனுப்பும் பணி துவக்கம்!



சென்னை, செப். 07–

தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான அரசு 'தாய் மாமன் தங்க மோதிரம் திட்டம்' என்ற புதிய திட்டத்தைத் துவங்க தயாராகி வரும் நிலையில், இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தைப் பெற்ற நகைக்கடை நிறுவனங்கள் தங்கள் கடையில் இருந்து பொருட்களை அனுப்பத் தொடங்கியுள்ளன.

'அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு, ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்' என, முதல்வர் விஜய் அறிவித்தார். அதைத் தொடர்ந்து, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் சார்பாக, ஆண்டுக்கு 4.41 லட்சம் குழந்தைகளுக்கு, தலா ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

இந்த திட்டம் வரும் செப்டம்பர் 15ம் தேதி துவங்குகிறது; இந்த திட்டத்தில் தயார் செய்யப்படும் தங்க மோதிரங்களை இருப்பு வைப்பதற்காக மாநிலத்தில் 107 மையங்களில், அனைத்து நவீன அம்சங்களுடன் கூடிய பாதுகாப்பு பெட்டகம் அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக பட்ஜெட்டில் ரூ. 2,560 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தைப் பெற்ற நகைக்கடை நிறுவனங்கள் தங்கள் கடையில் இருந்து பொருட்களை அனுப்பத் தொடங்கியுள்ளன.

# சென்னையில் அமைச்சர் ஜெகதீஸ்வரி கார் மோதி இளைஞர் பலி; ஓட்டுநர் கைது!



சென்னை, செப். 07–

அமைச்சர் ஜெகதீஸ்வரி, இன்றைய சட்டப்பேரவையில் கலந்துகொள்ள விருதுநகரில் இருந்து சென்னை நோக்கி (செப். 7) அதிகாலையில் அரசு வாகனத்தில் வந்துகொண்டிருந்தார். அவரது குடும்பத்தினரும் அமைச்சருக்கு சொந்தமான மற்றொரு வாகனத்தில் உடன் வந்துகொண்டிருந்தனர்.

இந்த நிலையில், சென்னையை அடுத்த காட்டாங்குளத்தூர் பகுதி அருகே வந்துகொண்டிருந்தபோது, அமைச்சர் ஜெகதீஸ்வரியின் குடும்பத்தினர் பயணித்த கார், இருசக்கர வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த இறையன்பு (26) சம்பவ இடத்திலேயே பலியானார்.

இதனையடுத்து, விபத்தை ஏற்படுத்திய அமைச்சரின் சொந்த வாகனத்தைக் கைப்பற்றி, போக்குவரத்துக் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விபத்து தொடர்பாக அதிவேகமாக மற்றும் அஜாக்கிரதையாக வாகனம் ஓட்டியதாக இரு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, காரை ஓட்டி வந்த சின்ன அக்னியை காவல்துறையினர் கைது செய்தனர்.

# போர் செலவீனங்களுக்காக ஆபாசப் படங்களை சட்டப்பூர்வமாக்கும் உக்ரைன்?



உக்ரைன், செப். 07–

உக்ரேனிய நாடாளுமன்ற உறுப்பினர் யாரோஸ்லாவ் ஜெலெஸ்னியாக் ஆதரிக்கும் ஒரு மசோதா, நாட்டின் ஆபாச படத் துறையை சட்டப்பூர்வ பொருளாதாரத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் 25 மில்லியன் டாலர் வரை வரி வருவாய் ஈட்ட முடியும் என்று வாதிடுகிறது.

உக்ரைனிய நாடாளுமன்றத்தின் நிதி குழுவிற்கு தலைமை வகிக்கும் ஜெலெஸ்னியாக், அந்த பணம் போர்பணிகளுக்காக 30,000 ஆளில்லா விமானங்களை வாங்குவதற்கு போதுமானதாக இருக்கும் என்று மதிப்பிடுகிறார்.

ஆபாச படங்களை தயாரிப்பது, வைத்திருப்பது அல்லது விநியோகிப்பது தற்போது சட்டவிரோதமாகும், மேலும் இதற்கு ஏழு ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படலாம். இருந்தபோதிலும், ஊழல் நிறைந்த காவல்துறையின் உதவியுடன் ஆபாசப்பட தொழில் தொடர்ந்து விரிவடைந்து வருகிறது. உக்ரைனிய அதிகாரிகள் சமீபத்தில் ஆபாசம்சார்ந்தஉள்ளடக்கத்தை உருவாக்குபவர்களிடம் இருந்து வரிகளை வசூலிக்க தொடங்கியுள்ளனர். ஆனால், தங்கள் வருமானத்தை அறிவிக்கும் கிரியேட்டர்கள், உக்ரைனின் ஆபாச சட்டங்களின் கீழ் குற்றமாக இருக்கும் செயல்களை வெளிச்சத்திற்கு கொண்டுவர முடியும்.

"இந்தப் பெண்கள் ஒன்று வரி செலுத்தாமல் அதற்காக குற்றவியல் வழக்குகளை எதிர்கொள்கிறார்கள், அல்லது வரி செலுத்தி ஆபாச சட்டங்களை மீறியதாக குற்றம் சாட்டப்படுகிறார்கள்," என்று உக்ரைன் நாடாளுமன்றத்தின் நிதிக் குழுவின் தலைவரான ஜெலெஸ்னியாக், ஜர்னலிடம் கூறினார்.

ரஷியா தனது முழு அளவிலான படையெடுப்பை தொடங்குவதற்கு முன்பு, வயது வந்தோருக்கான பொழுதுபோக்கு தொழில் விஷயத்தில் உக்ரேனிய அதிகாரிகள் பெரும்பாலும் கண்டுகொள்ளாமல் இருந்தனர்.

மூன்று பிராந்தியங்களில் உள்ள அதிகாரிகள் 20,000 டாலர் வரை லஞ்சம் பெற்றதாக கூறப்படும் வழக்குகளை உக்ரேனிய தலைமை வழக்கறிஞர் அலுவலகம் சமீபத்தில் வெளிப்படுத்தியதாக அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜர்னல் மேற்கோள் காட்டிய புள்ளிவிவரங்களின்படி, அந்த தளத்தின் தாய் நிறுவனமான ஃபீனிக்ஸ் இன்டர்நேஷனலின் தரவுகளின் அடிப்படையில், 2023–ஆம் ஆண்டில் 7,900 உக்ரேனியர்கள் ஒன்லிஃபேன்ஸ் மூலம் 131 மில்லியன் டாலருக்கும் அதிகமாக சம்பாதித்துள்ளனர். ஆனால், கிரியேட்டர்களிடம் இருந்து வருவாய் வசூலிப்பதற்கான வரி அதிகாரிகளின் முயற்சிகள் ஒரு புதிய சிக்கலை உருவாக்கியுள்ளன.

# மீனாட்சியம்மன் கோயில் நில மோசடி! மேலும் 4 பேர் கைது!



மதுரை, செப். 07–

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மற்றும் அழகர்கோயில் சேவைக்காக உருவாக்கப்பட்ட அறக்கட்டளைக்குச் சொந்தமான சுமார் 1.79 ஏக்கர், ரூ.60 கோடி மதிப்பிலான நிலம் முறைகேடாக பட்டா மாற்றம் செய்யப்பட்டு, பத்திரப்பதிவு மற்றும் அடமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக எழுந்த புகார் தொடர்பான வழக்கில், இதுவரை 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கில் மொத்தம் 19 பேர் மீது மதுரை மாநகர மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். முதற்கட்டமாக புதுக்கோட்டை ராஜ்குமார், உசிலம்பட்டி இளையராஜா, முன்னாள் தாசில்தார் அன்பழகன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து முறைகேடான பத்திரப்பதிவுக்கு உதவியதாகக் கூறப்படும் திண்டுக்கல் சிறுமலையைச் சேர்ந்த காளிக்குமார், கோயில் நிலத்தின் பட்டா மாற்ற நடவடிக்கையில் தொடர்புடையதாகக் கூறப்படும் முன்னாள் வி.ஏ.ஓ. அரசன், முன்னாள் சார் பதிவாளர் அனந்தராமன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதன் மூலம் கைது எண்ணிக்கை 6 ஆக உயர்ந்தது. இந்நிலையில், தற்போது மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள்: முத்துராணி (60) கணேசன் மனைவி, புதுக்கோட்டை; ராஜேந்திரன் (59) வெள்ளைச்சாமி மகன், கரம்பக்குடி; ஜோதி (50) சின்னப்பா மனைவி, குளத்தூர்; கீதா (49) நாராயணன் மனைவி, புதுக்கோட்டை. இவர்கள் வழக்கு எண் 0035/2026, IPC 120(B) (கூட்டுச்சதி), 420 (மோசடி) ஆகிய பிரிவுகளின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை கைது செய்யப்பட்டுள்ள 10 பேரில் அரசு வருவாய்த்துறை அதிகாரிகள், முன்னாள் வி.ஏ.ஓ., சார் பதிவாளர் மற்றும் நிலத்துடன் தொடர்புடைய தனிநபர்கள் இடம்பெற்றுள்ளனர். மீதமுள்ள குற்றம்சாட்டப்பட்டவர்களின் பங்கு, பட்டா மாற்றம், பத்திரப்பதிவு மற்றும் நிலத்தை கைமாற்றியதில் யார் யார் தொடர்புடையவர்கள் என்பது குறித்து மத்திய குற்றப்பிரிவு போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சட்டப்பேரவையில் திமுக வெளிநடப்பு பரபரப்பு- உதயநிதியின் சரமாரி குற்றச்சாட்டு!



சென்னை, செப். 07–

தமிழ்நாடு சட்டப்பேரவையில் முதலமைச்சர் விஜய் பேசியதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுகவினர் வெளிநடப்பு செய்தனர். இதைத்தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், முதலமைச்சர் விஜய் சினிமா சூட்டிங் டயலாக் போல பேசியதாகவும், திமுக எழுப்பிய கேள்விகளுக்கு உரிய ஆதாரங்களுடன் பதில் அளிக்கவில்லை என்றும் குற்றம்சாட்டினார்.

முதலமைச்சர் விஜய் மீது வழக்கு நிலுவையில் இருப்பதாகவும், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் மீதும் அமலாக்கத்துறை வழக்கு இருப்பதாகவும் உதயநிதி குறிப்பிட்டார். வழக்குகள் நிலுவையில் உள்ள சிலரையும் முதலமைச்சர் தன்னுடன் வைத்திருப்பதாக அவர் விமர்சித்தார்.

மேலும், திமுகவை மிரட்டுவதற்காக லஞ்ச ஒழிப்புத்துறை சோதனைகள் நடத்தப்பட்டதாகவும், முதலமைச்சரின் நண்பர்கள் மற்றும் ஆலோசகர்கள் கனிமவளத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் உதயநிதி குற்றம்சாட்டினார்.

முதலமைச்சர் பேசிய குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை என்றும், அமலாக்கத்துறை அறிக்கைகள் மற்றும் சர்காரியா ஆவணங்கள் குற்றச்சாட்டுகள் மட்டுமே என்றும் அவர் கூறினார்.

"மிசா பற்றி பேச முதலமைச்சருக்கு என்ன தகுதி இருக்கிறது? இவர் அரசியலுக்கு வந்தது ஒரு விபத்து" என்றும் உதயநிதி ஸ்டாலின் கடுமையாக விமர்சித்தார். மேலும், சட்டப்பேரவைத் தலைவர் ஒரு தலைப்பட்சமாக செயல்பட்டதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

# தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு தனியார்மயமாக்கல் கிடையாது - இஸ்ரோ விளக்கம்!




புதுடெல்லி, செப். 07–

தனியார் நிறுவனங்களின் பங்களிப்பு தனியார்மயமாக்கல் கிடையாது என இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ மறுத்துள்ளது.

இஸ்ரோவின் உற்பத்தி மற்றும் செயல்பாட்டு பொறுப்புகளை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க உள்ளதாக செய்திகள் வெளியான நிலையில் இதுகுறித்து இஸ்ரோ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், இது முற்றிலும் ஆதாரமற்ற தவறான செய்திகள் என்றும், இஸ்ரோவை தனியார்மயமாக்கும் எண்ணமோ அல்லது அதன் முக்கியத்துவத்தை குறைக்கும் திட்டமோ இல்லை என தனது அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும், "இந்தியாவின் முதன்மை விண்வெளி ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனமாக இஸ்ரோவே தொடர்ந்து செயல்படும்.

தேசிய அளவிலான விண்வெளி திட்டங்கள், விண்வெளி அறிவியல் ஆராய்ச்சி, ஆய்வுப் பணிகள் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் இஸ்ரோவின் முக்கியப் பங்கு தொடரும். விண்வெளித் துறையில் தனியார் துறையின் பங்களிப்பை வரவேற்பது இஸ்ரோவின் பொறுப்புகளைக் குறைப்பதற்காக அல்ல.

மாறாக இந்தியாவின் அடுத்தகட்ட விண்வெளி இலக்குகளில் இஸ்ரோ அதிக கவனம் செலுத்துவதற்காகவே ஆகும்.

ஏற்கனவே வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்பாட்டுத் திறன்களை மேலும் விரிவுபடுத்துவதில் தனியார் தொழில் நிறுவனங்களுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படும்.

இதனால் இஸ்ரோவின் முக்கியத்துவம் மாறவில்லை. மாறாக இந்தியாவின் விண்வெளித் துறையின் அளவும் கட்டமைப்பும் விரிவடைகிறது. தற்போதைய சீர்திருத்தங்களை தனியார்மயமாக்கலாகப் பார்க்காமல், விண்வெளித் துறையின் திறன் மேம்பாடாகவே பார்க்க வேண்டும்" என இஸ்ரோ விளக்கியுள்ளது.

முன்னதாக, உற்பத்தி மற்றும் செயல்பாட்டுப் பொறுப்புகள் சில தனியார் நிறுவனங்களுக்கு மாற்றப்பட உள்ளதாக வெளியான செய்திகளின் பின்னணியில் இஸ்ரோ ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய 9 தொழிற்சங்க அமைப்புகள் ஒன்றிணைந்து கடந்த செப்டம்பர் 4 அன்று இஸ்ரோ தலைவர் வி. நாராயணனுக்குக் கடிதம் எழுதியிருந்தன. அரசின் கொள்கை முடிவுகள் மற்றும் இஸ்ரோவின் எதிர்காலப் பங்கு குறித்து தெளிவுபடுத்துமாறு அந்த அமைப்புகள் கோரியிருந்த நிலையில், தற்போது இஸ்ரோ இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

# தி.மு.க. முன்னாள் அமைச்சர் சிவசங்கருக்கு இதய அறுவை சிகிச்சை!



சென்னை, செப். 07–

தி.மு.க., முன்னாள் அமைச்சர் சிவசங்கர், தற்போது குன்னம் தொகுதி எம்.எல்.ஏ.வாக பதவி வகித்து வருகிறார். தேர்தல் தோல்வி குறித்து ஆய்வு செய்ய தி.மு.க. அமைத்த குழுவிலும் சிவசங்கர் இடம்பெற்றுள்ளார்.

தமிழக சட்டமன்ற கூட்டத்தொடர் தற்போது நடந்து வரும் சூழலில், கூட்டத்தொடரில் பங்கேற்க சென்ற சிவசங்கருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிவசங்கர் அனுமதிக்கப்பட்டார்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள், அவருக்கு இதயத்தில் சிறிய அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என பரிந்துரைத்தனர். இதன்படி சிவசங்கருக்கு தனியார் மருத்துவமனையில் இதய அறுவை சிகிச்சை நடைபெற்றது. தற்போது அவரது உடல்நலம் சீராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களின் கண்காணிப்பில் தற்போது சிவசங்கர் மருத்துவமனையில் ஓய்வில் உள்ளார். அவரை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.





| வ. எண் | பிரசாதம் | எண்ணிக்கை | எடை (கிராமில்) | விலை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | லட்டு | 1 | 50 | 20 |
| 2 | தேன்குழல் | 1 | 50 | 25 |
| 3 | மிளகு வடை | 1 | 50 | 20 |
| 4 | அதிரசம் | 1 | 50 | 20 |
| 5 | புளியோதரை | 1 | 150 | 20 |
| 6 | சக்கரை பொங்கல் | 1 | 150 | 20 |
| 7 | பஞ்சாமிருதம் | 1 | 250 | 30 |
| 8 | அப்பம் | 1 | 50 | 20 |
| 9 | தேன் தினை மாவு | 1 | 180 | 15 |
| 10 | அரவணை | 1 | 100 | 50 |

இது தவிர சிறப்பு வாய்ந்த தனித்தன்மை கொண்ட பிரசாதங்களை கோயிலில் விற்பனை செய்ய அந்தந்த இணை ஆணையர்கள் முடிவு செய்து அனுமதிக்கலாம்.


Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020